1995 நவம்பர் 9]

மாண்புமிகு திரு. கு.ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திட்டம் துவங்கக் கூடிய காலத்தில், இது பரிசீலிக்கப்படும்.

முற்பகல் *10-35*

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 70, திரு. வ.மு. சுப்பிரமணியம், மாண்புமிகு வணிக வரிகள் துறை அமைச்சர்.

70—

வரி ஏய்ப்பைத் தடுக்க நடவடிக்கை

* ***35162-*** திரு. வ.மு. சுப்பிரமணியம்:

மாண்புமிகு வணிக வரிகள் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வெளிமாநிலத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கிருந்து வியாபாரம் செய்வதாக தவறான கணக்கு காட்டி (Consignment Sales) வரி ஏய்ப்பு என்னென்ன உற்பத்தி பொருட்களில் நடைபெறுகின்றது?

(ஆ) அதனைத் தடுக்க மாநில அரசு எடுத்துக் கொண்ட முயற்சி பற்றிய விவரம் என்ன?

மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி, வணிக வரிகள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வெளி மாநிலத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கிருந்து வியாபாரம் செய்வதாக (Consignment Sales) என்ற வகையில் வரி ஏய்ப்பு செய்யப்படும் பொருட்கள் கீழ்க்கண்டவைகள் ஆகும்:—

1. கனிமப்பொருள்
2. இரும்பு கலாய்குழாய்கள்
3. எலக்ட்ரானிக் பொருள்கள்
4. மருந்துகள்
5. பூச்சி மருந்துகள்
6. இரும்பு மற்றும் ஸ்டீல்
7. பிவிசி பைப்ஸ்

8. ஆட்டோமொபைல் பாகங்கள்

9. மோட்டார் சேசிஸ்

10. துணிநூல்

11. தாவர எண்ணெய்

12. மரவள்ளிக் கிழங்கு மாவு

13. பனியன் மற்றும் ஹொசைரி ஆயத்த ஆடைகள்

14. செயற்கை பட்டு நூல்கள்.

இவற்றின் மீது எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகள்:

1. அதிக அளவில் வரிவிலக்கு கோருபவர்கள், வியாபாரத்தொகையில் வேறுபாடு காணும் இனங்களில் புலனாய்வு கோப்புகள் திறந்து வணிக ஸ்தலங்களில் திடீர் கடைத்தணிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

2. தொடர்ச்சியான வாகனத்தணிக்கை, சோதனைச் சாவடியில் தணிக்கை மற்றும் சுற்றும் படையில் தணிக்கைகள் ஆகியவை மூலம் வரி ஏய்ப்பு கண்காணிக்கப்படுகிறது.

3. சந்தேகத்திற்குரிய பல இனங்களில், தேவைப்படின், பிற மாநிலங்களுக்குச் சென்று அங்கிருந்து கூடுதல் விவரங்கள் பெற்று அதன் அடிப்படையில் ஆராய்ந்து வரி ஏய்ப்பு கண்டுபிடிக்கப்படுகிறது.

இப்படிப்பட்ட நடவடிக்கையின் மூலம் கடந்த மூன்று ஆண்டுகளில் அரசுக்கு 219 கோடியே 72 லட்சத்து 7 ஆயிரம் ரூபாய் கூடுதல் வருவாய் கிடைத்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வ. மு. சுப்பிரமணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கன்சைன்மெண்ட் விற்பனை மூலம் வரி ஏய்ப்பைத் தடுக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க மாநில அரசு ஏதாவது கேட்டுக்கொண்டதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெளி மாநில விற்பனையில் வரி மோசடி நடைபெறுகிறது என்பதை நமது தமிழக அரசு மட்டும் அல்லாமல் ஏனைய மாநில அரசுகளும் மத்திய அரசிடம் பல ஆண்டுகளாக முறையிட்டு வருகின்றன. அந்த அடிப்படையில் சட்ட ஆணையம் இதை விரிவாக ஆய்வு செய்து 2-2-1983-ல் பாராளுமன்றத்தில்

1995 நவம்பர் 9]

அரசியல் சாசனத் திருத்தச் சட்டம் கொண்டு வந்திருக்கிறது. கன்சைன்மெண்ட் வரி விதிப்பு முறைக்கு வழி வகுக்கின்ற வகையில் அந்தச் சட்ட திருத்தம் கொண்டு வரப்பட்டு இருக்கிறது. இருப்பினும் இதுவரையில் மத்திய அரசு வரி விதிப்புக்கு உரிய சட்டம் கொண்டு வரவில்லை. வரி விதிக்க வகை செய்யக்கூடிய அரசியல் சாசன திருத்தச் சட்டம் 1983-ல் கொண்டுவரப்பட்டிருக்கிறது. ஆனால் வரி விதிக்கக்கூடிய மத்திய வரி விதிப்பு முறையில் சட்டம் எதுவும் கொண்டு வரவில்லை. இருப்பினும் 1983, 1984, 1989-ஆம் ஆண்டுகளில் இந்தியாவில் உள்ள அனைத்து முதலமைச்சர்களுடைய மாநாட்டைக் கூட்டி இதற்கான ஆய்வு செய்யப்பட்டது. அதற்குப் பிறகு மத்திய அரசு செலக்ட்டு முதலமைச்சர்கள் என்ற வகையில் குறிப்பிட்ட மாநில முதலமைச்சர்களை அழைத்து இதற்கான விவாதம் நடத்தியிருக்கிறது. அதற்குப் பிறகு இண்டர் ஸ்டேட் கவுன்சில் இதை வைத்து 1990-ஆம் ஆண்டு மத்திய அரசு விவாதித்து இருக்கிறது. அதற்குப் பிறகு 1990-ல் இதற்கான சட்ட திருத்தம் கொண்டுவருவது என்று முடிவு எடுக்கப்பட்டது. ஆனால் இன்று வரையிலும் மத்திய அரசு இந்த வரி ஏய்ப்பைத் தடுப்பதற்கு மாநிலங்களுக்கு உதவிகரமாக மத்திய விற்பனை வரிச் சட்டத்தில் திருத்தம் எதுவும் கொண்டுவரவில்லை. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் 8-12-1992-ல் இதனை வலியுறுத்தி மத்திய நிதி அமைச்சருக்கு விரிவான கடிதம் ஒன்றும் எழுதியிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வ. மு. சுப்பிரமணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வரி மோசடி செய்பவர்கள் மீது இந்திய தண்டனைச் சட்டப்படி வழக்கு எதும் போடப்படுமா என்றும் அதற்கு இடம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரி ஏய்ப்பு ஏற்படுகின்றபோது அதனைத் தடுப்பதற்கு மத்திய விற்பனை வரிச் சட்டத்திலும் வழிவகை உண்டு; தமிழக பொது விற்பனை வரிச் சட்டத்திலும் வழிவகை உண்டு; வெளி மாநிலத்தில் உள்ள ஒரு வியாபாரிக்கு இங்கே இருக்கிற ஒரு உற்பத்தியாளரோ ஒரு வியாபாரியோ ஒரு பொருளை விற்று விட்டு இங்கிருந்து விற்பனை செய்யவில்லை, அந்த மாநிலத்திலே வைத்துக் கொண்டுதான் விற்பனை நடைபெறுகிறது என்று ஏமாற்றப்படுகின்ற வகையில்தான் இந்த கன்சைன்மெண்ட் சேல்ஸ் டாக்ஸில் வரி ஏய்ப்பு செய்கின்ற முறை;

[1995 நவம்பர் 9

முற்பகல் 10-40

இதனைத் தடுப்பதற்குப் பல்வேறு வகைகளில் நீதிமன்றங்களில் வழக்குகள் நடைபெற்று வருகிறன்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்.

திரு. ஏ.கே.சி. சுந்தரவேல்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர்நீதிமன்றத் தீர்ப்பு ஏதாவது இந்த விற்பனை முறையில் தரப்பட்டுள்ளதா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்சைன்மென்ட் டாக்ஸ் என்று சொல்லப்படுகிற பொழுது, குறிப்பாகத் தமிழக மாநிலத்திலிருந்து ஒரு உற்பத்தியாளர், தமது உற்பத்திப் பொருட்களை வேறு ஒரு மாநிலத்தில் விற்கிறார் என்று சொன்னால், அதை விற்பனையாக அல்லாமல் அந்த மாநிலத்திலிருக்கிற தன்னுடைய கிளை மூலம், அல்லது முகவரி மூலம் விற்பனை செய்கிறேன் என்று சொல்லி வரி ஏய்ப்பு செய்கிறார்கள். ஆனால் வெளி மாநிலத்தில் விற்கப்படுகிற பொழுது படிவ எண். எஃப் என்ற ஒரு படிவத்தைப் பூர்த்தி செய்து கொடுக்கப்பட வேண்டும். அந்தப் படிவத்தில் உள்ள விவரங்களை முழுமையாக நிரூபணம் செய்வதற்கு அந்த வியாபாரிகள் வணிக வரித் துறைக்குக் கடமைப்பட்டிருக்கிறார்கள் என்ற வகையில் உயர்நீதிமன்றத்தில் இரண்டு நபர்கள் அடங்கிய நீதிபதிகள் குழு ஒரு தீர்ப்பை வழங்கியிருக்கிறார்கள். அந்தத் தீர்ப்பின் அடிப்படையில் இப்போது வணிக வரித் துறை அதிகாரிகள் துரித நடவடிக்கை எடுத்து வருகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 71, திருமதி கவிநிலவு தர்மராஜ், மாண்புமிகு சமூக நலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர்.

71—

சிவகிரியில் கூட்டுறவு நூற்பாலை அமைத்தல்

* ***46551*—திருமதி கவிநிலவு தர்மராஜ்:**

மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மொடக்குறிச்சி தொகுதி, கொடுமுடி ஒன்றியம், சிவகிரியில் கூட்டுறவு நூற்பாலை அமைத்திட அரசு ஆவன செய்யுமா?